# பாலர் கல்வி

தொகுதி 1] 1936௵ ஏப்ரல்மீ [பகுதி 2

## A Message from H. F. Saunders Esq., I. E. S.

OLD COLLEGE, CATHEDRAL P. O., MADRAS.
*7th April 1936.*

DEAR MR. SABHESAN,

Thank you for sending me a copy of the first issue of *Balar Kalvi*. Apart from some of the half-tone blocks, it is well got up and nicely printed.

I am very glad to see that you are introducing a Safety First series, and particularly so to find that your first picture on the subject inculcates care for the safety of the general public rather than of the individual concerned, since one very seldom falls on one's own plantain skins!

Among the many aspects of character-building which I am sure your Association will try to emphasise through this journal, I hope you will give great prominence to one; I mean the **abolition of the pernicious practice of making children stand back to back when working sums.** I honestly believe that this practice is at the root of much of the distress of India, since it is a definite inculcation into the mind of each child of the idea that he is not trusted by anyone, and that no one else can be trusted by him, and the ineluctable consequence of such training is mutual distrust and refusal to co-operate in the adult. Every psychologist knows that it is extremely difficult to eradicate ideas which are firmly planted in the subconscious mind of the child, and the obvious course to pursue is to train the children to expect to be trusted, to trust each other, and so to develop a wholesome horror of cheating in all its forms. **Mutual distrust is the curse of India** let us help to get rid of it.

I wish the new journal all success, and trust that it will be a source of great help and inspiration to all elementary school teachers in the Tamil Country.

Yours sincerely,
H. F. SAUNDERS.

2-C. இவைகளைத்தவிரத் தெருக்களில் பார்க்கக்கூடிய தொழிலாளர் கடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 37. | தட்டான் | — 4 | 39. | அம்பட்டன் | — 16 |
| 38. | சக்கிலி | — 6 | 40. | தையற்காரன் | — 25 |

2-D. பொதுவாக எல்லாத் தெருக்களிலும் காணக்கூடிய பொதுக் கடைகளும் அவைகளின் எண்ணிக்கையும் (தெருவுக்குத்தகுந்தபடி)

| | | |
|---|---|---|
| 1. | மளிகைக் கடை | — 1, 2, 3, 3, 5, 1, 1, 1, 1 |
| 2. | அரிசிக் கடை | — 1, 3, 2, 2 |
| 3. | காப்பி | — 1, 2, 1 |
| 4. | ஆப்பம் | — 3, 1, 4, 2, 3, 1, 3, 4, 4 |
| 5. | வெற்றிலைக் கடை | — 10, 3, 3, 2, 1, 1, 2 |
| 6. | விறகுக் கடை | — 3, 2, 2, 2, 3, 1 |
| 7. | காய்கறிக் கடை | — 2, 3 |
| 8. | பழக் கடை | — 2, 1 |
| 9. | நாணயக் கடை (வட்டி) | — 3, 1, 1 |
| 10. | பொடிக் கடை | — 2, 3, 1 |
| 11. | மாவுமில் | — 1, 1 |
| 12. | தகரக் கடை | — 1 |
| 13. | எண்ணெய்க் கடை | — 1, 1, 1, 2, 1, 2 |
| 14. | தவிடு | — 2, 1, 2, 1 |
| 15. | வைக்கோல் | — 3, 2 |
| 16. | ஷாப் | — 1, 1 |
| 17. | மூங்கில் | — 3 |
| 18. | மரக் கடை | — 3 |
| 19. | மருந்து | — 1 |
| 20. | மிட்டாய்க் கடை | — 1 |
| 21. | தட்டான் | — 2, 2, 2, 1, 1 |
| 22. | தையற்காரன் | — 2, 2, 1, 2 |
| 23. | அம்பட்டன் | — 6 |

பிள்ளைகளே இக்குறிப்புக்களைக் கொண்டு வருகிறார்கள். இவைகளிலிருந்து நமது கணக்குப் பாடத்திட்டத்தைக் குழந்தைகளுக்கு ஏற்றபடிக்கும் தினசரி நடவடிக்கைகளுக்கு ஏற்றபடிக்கும் ஒழுங்கு படுத்திக்கொள்ள முடியும் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியும். இம்மாதிரி, ஒவ்வொருவரும் ஊரின் விசேஷங்களைப் பிள்ளைகளின் உதவியைக்கொண்டு கவனிப்பது நலம்.

### 3. பிள்ளைகளின் கணித ஞானத்தை அறிதல்: சிறுபரீக்ஷைகள்

I 1934-35 }
II 1935-36 } 5-வது வகுப்புக் குழந்தைகளின் விடை.

| நெ. | தகப்பனாரின் மாதச் சம்பளம் | | ஒரே தடவையில் எவ்வளவு ரூபாய் பார்த்திருக்கிறாய்? | | ஒரே தடவையில் எவ்வளவு அதிகமான ரூபாய்க்குச் சாமான் வாங்கியிருக்கிறார்கள்? | |
|---|---|---|---|---|---|---|
| | I | II | I | II | I | II |
| 1 | 150 | 44 | 50 | 30 | 13 | 185 |
| 2 | 11 | 45 | 100 | 10 | 21 | 200 |
| 3 | 15 | 10 | 58 | 1000 | 63 | 650 |
| 4 | 100 | 10 | 500 | 30 | 365 | 5 |
| 5 | 40 | 50 | 700 | 100 | 50 | 200 |
| 6 | 20 | நிலம் | 30 | 20 | | 60 |
| 7 | 15 | — | 300 | 100 | 10 | 600 |
| 8 | 1 தின | 60 | 50 | 500 | 10 | — |
| 9 | க்கூலி | 3காப் | 1000 | 1000 | 8 | 85 |
| | 1½ ரூ | பிக்கடை | நோட்டு | | | |
| 10 | 170 | 13 | 10 | 1000 | 2 | 70 |
| 11 | 10 | 20 | 100 | 30 | 30 | 3 |
| 12 | | 30 | 1000 | 100 | 10 | 100 |
| | 30 | | நோட்டு | | | |
| 13 | 150 | 100 | | 1000 | 24 | 1000 |
| 14 | | 96 | 200 | 100 | 21 | 10 |
| 15 | | 9 | 10ரூ. | 150 | | 160 |
| | 110 | | நோட்டு | | | |
| 16 | 200 | 10 | 100 | 10 | 30 | 2 |
| 17 | 120 | 150 | 3 | 1000 | — | 100 |
| 18 | 40 | 476 | 120 | 100 | — | 1000 |
| 19 | | 175 | செக் | 1000 | 1000 | 10 |
| | | | ரூ. 10000 | | | |
| 20 | | 15 | | 80 | | 11050 |
| 21 | | 100 | | 100 | | 45 |
| 22 | | 15 | | 30 | | 4 |
| 23 | | 20 | | 40 | | 50 |
| 24 | | 20 | | 30 | | 5 |
| 25 | | 45 | | 150 | | 200 |
| 26 | | 15 | | 80 | | 4 |

பொதுவாகக் கவனிக்குமிடத்துப் பிள்ளைகள் அதிக பணத்தைப் பார்த்திருப்பதில்லை. ஆயிரம் ரூபாய் பார்த்திருக்கிறவர்கள் பத்து நூறு ரூபாய் நோட்டுக்களாகப் பார்த்திருக்கிறார்கள். அவர்கள்கூட மார்வாரி வீட்டுப் பிள்ளை, பள்ளிக்கூடச் சேவகன் வீட்டுப் பிள்ளை முதலானோர். வீட்டில் கலியாண காலங்களில் சிலர் அதிக செலவு செய்ததைப் பார்த்திருக்கிறார்கள். சிலர், பவுன், பத்து ரூபாய் நோட்டு இவைகளைக்கூடப் பார்த்திருக்கவில்லை.

பெரிய எண்களை எந்தச் சந்தர்ப்பத்தில் பார்த்து அல்லது கேட்டிருக்கிறீர்கள்?

1. காஞ்சீபுரம் கருடோற்சவம். ஆயிரக் கணக்காக
2. லக்ஷ தீபம்
3. லக்ஷ தீபம் செலவு ரூ. 5,000
4. வீடுகட்ட பணம் ரூ. 10,000
5. பெரிய வீடு ரூ. 12,000
6. பணக்காரன் லக்ஷாதிபதி
7. ஸினிமா 1,000 ஜனங்கள்
8. லக்ஷம்
9. கோடி (தினசரிப் பத்திரிகை ரயில்வே வருமானம்)
10. 1,000 ஜனம், 1,000 ஓட்டு
11. 16,000 ஓட்டு
12. மார்வாரி 25 லக்ஷம் ரூபாய் சொத்து
13. 20,000 ஓட்டு
14. 1,000 தென்னைமரம்
15. லக்ஷம் ஜனங்கள்
16. 7,000 ஓட்டு
17. 900 ரூ. மரம்
18. காளஹஸ்தி கோயில் உற்சவம் லக்ஷ ஜனங்கள்
19. 400 ஓட்டு
20. லக்ஷ ஜனங்கள் டிராமா

பெரும்பாலும் பிள்ளைகள் இங்குச் சொல்லியுள்ள பெரு எண்களைக் காதாலே கேட்டிருக்கிறார்களே தவிரப் பார்த்ததில்லை. ஒரு ஆயிரம் என்பதே பொதுவாகத் தெரிந்துள்ள பெரிய எண்ணாயிருக்கிறதென்று ஊகிக்கலாம்.

## தினசரிப் பழக்கத்தில் நடவடிக்கையில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் அளவுகளும், அவைகளைக் குறித்த சொற்களும், படிப்படியாக அதிகரிக்கும் விதமும்

1. நீளம்

(i) அடி; (ii) கெஜம்; கெஜம், அடி; (iii) கெஜம், அடி, அங்குலம்; மைல், பர்லாங்கு; சாண், முழம்; (iv) சங்கிலி, பர்லாங்கு; மைல், பர்லாங்கு, கெஜம்; மார்பு, கெஜம், முழம்.

2. நிறை

(i) வீசை, பலம்: சேர், பலம் (ஊருக்குத் தகுந்தபடி); (ii) சேர்: மணங்கு, வீசை, பலம்; (iii) பாரம்: மணங்கு, சேர், குண்டு (வறகு) = ½ அந்தர் நிறுக்க; (iv) தட்டான் நிறை: பவுன், வராகனெடை, குன்றிமணி; (v) ரயில்வே நிறை: 40 சேர்—1 மணங்கு; (vi) தோலா, ரூபாய் எடை: 1 சேர்—(?). 80 ரூபாய் எடை.

3. நேரம்

(i) நாள்: மணி; (ii) மாதம், வருஷம்; நாள், வாரம்; மணி, நிமிஷம்; (iii) வருஷம், மாதம், வாரம், நாள்; (iv) நாள், மணி, நிமிஷம், செக்கண்டு; நாழிகை.

4. முகத்தல் அளவு

(i) படி; (ii) படி, ஆழாக்கு, மூட்டை; (iii) கலம்; (iv) சேர், சொம்பு, ஆடம்; (v) அவுன்ஸ்; (vi) புட்டி, காலன், டின், பீப்பாய்.

5-B. எண்ணல் அளவு—(சாமான்)

(1) ஜோடி; (2) ஜோடி, டஜன், குரோஸ்.

C. காகிதம்

(1) குயர், ரீம்; (2) பேல், ரீம், குயர், காகிதம்.

இவைகளைக் கவனிப்பதின் அவசியம்

தினசரிப் பழக்கத்தில் மைல், பர்லாங்கு, கெஜம், அடி, அங்குலம் என்று ஒரு வரிசைக் கிரமம் முழுமையும் உபயோகிக்க நேரிடுகிறதில்லை. "போல்" என்றதை யான் கேட்டதுண்டு, படித்ததுண்டு, உபயோகித்த தில்லை. ஒன்றிற்கும் அதற்கு அடுத்த மற்றொன்றிற்கும் உள்ள சம்பந்தம் ஒன்றையே பன்முறை உபயோகத்தில் எடுத்துக்கொள்கிறோம். இம்மாதிரி அளவுகளை அறிந்து கொள்ளுவதுதான் மிக்க அவசியமாகும்.

நாணயம்

நாணயத்திலும் இம்மாதிரி பல மாறுதல்கள் இருக்கின்றன. வராகன் என்பது பெரும்பாலும் வழங்கி வருகிறது. ஊருக்குத் தகுந்தாற்போல் துட்டு, பணம், பைசா என்பவை மதிப்பு மாறுபட்டு வருகின்றன.

துட்டு: 2 பை, 4 பை; பணம்: 1 அணா; 1 அணா 3 பை; 2 அணா; 2 அணா 6 பை; பைசா: 1 பை, 3 பை. என்று பல விதம்.

கால் ரூபாய், அரை ரூபாய், அரைக்கால் ரூபாய், முக்கால் ரூபாய், வீச ரூபாய் என்ற பதங்களும் பன்முறை வழக்கத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறு குழந்தைகள்கூட நாணயங்களைக் கையாண்டு வருகிறார்கள் என்பது கவனிக்கத் தகுந்தது.

கணித சம்பந்தமான சொற்கள்

ஒரு சொல்லுக்கு ஒரு அர்த்தம் உண்டு. அர்த்தம் தெரியாத சொல்லைக் கேட்பதிலும், சொல்வதிலும், படிப்பதிலும், எழுதுவதிலும் பிரயோஜனம் இல்லை. இது பாஷைப்பாட சம்பந்தமாயினும், பாஷை இல்லாத யாதொரு பாடமும் கிடையாததனாலும், முக்கியமான கணித பாடத்தில் தெரியாத பாஷையை நிரப்பி, கடினமாய்க் கருதப்பட்டு வரும் கணக்கை அதிக கடினமாகச் செய்யக்கூடாதாகையினாலும் இதைப் பற்றி நாம் பரிசீலனை செய்வது அவசியம். உதாரணமாக, சராசரி, ஜனத்தொகை, ஏக்ரா, ரொக்கம், வருமானம், விஸ்தீர்ணம். இச்சொற்கள் ஐந்தாவது வகுப்புப் பிள்ளைகளுக்கும் தெரியாமல் இருந்தன. ஒவ்வொரு சொல்

லும் நன்றாகத் தெரியும்படி சம்பாஷணை, அளவு, கண்ணால் பார்த்தல் முதலிய முறைகளை அனுசரித்துக் கற்பித்தல் அவசியமாகும். ஆகவே, உபாத்தியாயர்கள் கவனிக்கவேண்டிய கணித சாஸ்திரமான பல சொற்கள் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| வரவு | பாகம் | குடிக்கூலி |
| வரும்படி | பின்னம் | கஜானா |
| வருவாய் | சமபாகம் | பொக்கிஷம் |
| சம்பளம் | இனம் | சர்க்கார் |
| சம்பாத்தியம் | வரிசை | ரூபாய் நோட்டு |
| செலவு | முழுவதும் | நாணயம் |
| கடன் | மொத்தம் | ஜனத் தொகை |
| மீதி | லாபம் | ஒன்றுக்கொன்று |
| மிச்சம் | ஆதாயம் | இரண்டும் சேர்ந்து |
| கையிருப்பு | நஷ்டம் | இரண்டு பேரிடத்திலும் |
| பாக்கி | வாங்கின விலை | இவனைவிட அவனுக்கு |
| குறைவு | விற்ற விலை | வகுத்து |
| கம்மி | இறக்கம் | பிரித்து |
| கொஞ்சம் | முதல்தரம் | பங்கிடு |
| அதிகம் | நடுத்தரம் | மாற்று |
| "ரொம்ப" | கடைசித்தரம் | பிரி |
| ஜாஸ்தி | மட்டம் | சேர் |
| ஏற்றம் | புட்டி | பிரித்துக் கட்டு |
| தாழ்வு | சீசா | விஸ்தீர்ணம் |
| கிராக்கி | குப்பி | பரப்பு |
| மலிவு | டப்பா | ஏக்ரா |
| வித்தியாசம் | டப்பி | மா |
| வட்டி | கிட்டத்தட்ட | காணி |
| முதல் | வாடகை | குழி |
| களஞ்சியம் | வைக்கோல் (சுமை) | சங்கியை (எண்ணிக்கை) |
| பண்டகசாலை | ,, (பிரி) | இலக்கம் |
| நிலம் | ரொக்கம் | நவ தானியம் |
| பூமி | காணம் | பஞ்ச உலோகம் |
| ஸ்தலம் | வாடிக்கை | பஞ்ச வர்ணம் |
| சதுரம் | வீதம் | சில்லறை வியாபாரம் |
| சதுர அங்குலம் | கோணி | மொத்த வியாபாரம் |

| | | |
|---|---|---|
| சதுர அடி | சாக்கு | சில்லரை |
| அங்குல சதுரம் | சும்மாடு | கடன் |
| நஞ்சை | பிரிமணை | தாராதரம் |
| புஞ்சை | உறி | தள்ளிக் கொடு |
| எடை | ௹ | கமிஷன் கொடு |
| பளு | ௴ | பலவித தினுசுகள் |
| கனம் | ௳ | 1. மாமரம் |
| நிறை | விளம்பரம் | 2. நெல் |
| சராசரி | ௸ | 3. வாழை |
| பொழுது | ,, | 4. தானிய வகைகள் |
| காலம் | (இம்மாதிரி | மளிகை |
| நேரம் | அடையாளங்கள்) | ஏலம் |

காசுகொடுத்துக் கணக்காகப் பண்டங்களை வாங்கின பிறகும் 'கொசிர்' (சென்னை) 'பிசுக்கு' (தஞ்சாவூர்) 'ஓசு' (மதுரை) என்று சொல்லி கொஞ்சம் அதிகம் பெறுகிறோம். இவை ஒவ்வொன்றைக் குறித்தும் நாம் சிந்திப்பது சிலாக்கியம். நாம் சில சமயங்களில் இச்சொற்கள் குழந்தைகளுக்குத் "தெரிந்திருக்கலாம், தெரிந்திருக்கவேண்டும், தெரியாமலிருக்குமா, பேசிச் சகஜம்தானே, தெரிந்திருக்க வேண்டாமா" என்று சொல்லாமல் இச் சொற்களின் அர்த்தம் விளங்கும்படி சொல்லிக் கொடுத்த பிறகு பரீக்ஷை செய்து பார்த்தல் நலம். (வகுக்கும் எண், வகுக்கப்படும் எண், ஈவு, மிச்சம்: பெருக்கும் எண், பெருக்கப்படும் எண், பெருக்குத் தொகை).

குழந்தைகளின் வயது


பத்து வருஷங்களுக்கு மேலாக வைக்கப்பட்டிருக்கும் சில தஸ்தாவேஜுகளைப் பார்த்ததில் தற்சமயம் பள்ளிக்கூடத்தில் அந்தந்த வகுப்பில் படித்து வருகிற பிள்ளைகளின் சராசரி வயது பத்து வஷங்களுக்கு முன் இருந்ததைவிட நிச்சயமாய் ஒரு வயது குறைவாய் இருக்க முடியும் என்று சொல்ல நேரிடுகிறது.

1923—1924 எனது ஐந்தாவது வகுப்பில் இருந்த சராசரி வயது 11 வருஷம், 5 மாதம்; 1935-ல் அதே வகுப்பில் சராசரி வயது 10 வருஷம், 6 மாஸத்திற்குக் குறைந்ததாயும் இருந்தது. இந்த வயதுக் குறைவும் ஒரு உண்மையை விளக்குகிறது. ஏனெனில் அக்காலத்தில் $2\frac{1}{2}$ நிமிஷத்தில் 16 சிறு வகுத்தல் கணக்குகளைச் செய்ய முடிந்தது. இச்சமயம் 9 நிமிஷத்தில் 13 சிறு வகுத்தல் கணக்குகளை மாத்திரம் செய்ய முடிந்தது. தேகம், மனம் இரண்டும் ஒன்று பட்டே இயற்கையில் வளர்ந்துவருகின்றன என்பதைக் காட்ட இதைவிட வேறு அத்தாக்ஷி வேண்டுமா? ஆகவே சொல்லிக் கொடுக்கும் விஷயங்களையும் முறைகளையும் வயதிற்குத் தகுந்தபடி மாற்றிக் கொள்ளவேண்டிய அவசியம் புலப்படுகிறதல்லவா?

6

**ஆகவே குழந்தைகளின் இயற்கை வளர்ச்சியைக் கவனிப்பது அவசியம்**

பொம்மை வியாபாரிகளைப் பாருங்கள்; குழந்தைகளின் பிரியத்தையும் கவனத்தையும் கவரும்படி பற்பல பொம்மைகளைச் செய்து வருகிறார்கள். மிட்டாய் வியாபாரிகளைக் கவனியுங்கள்; அவர்களும் குழந்தைகளின் மனதைக் கவரத்தக்க பக்ஷணங்களைச் செய்து வருகிறார்கள். மேலும் தெருவில் விற்கிற காலத்தில் உள்ளே இருக்கிற குழந்தைகளை வெளியில் வரும்படி செய்யவும் ஏற்ற முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். மணி அடிக்கிறார்கள், ஊதல் ஊதுகிறார்கள், பாட்டுப் பாடுகிறார்கள். அடியிற்கண்ட பாட்டு எனக்கு அடிக்கடி ஞாபகம் வருகிறது.



சின்னச் சின்ன மிளகாய்
அது சிங்கார மிளகாய்
பச்சை பச்சை மிளகாய்
அது பெங்களூர் மிளகாய்
தஞ்சாவூர் மிளகாய்
தோட்டத்து மிளகாய்
நாக்கிலே போட்டால் ருசிதான்
வாயிலே போட்டால் தண்ணீர்தான்
அது தம்படிக்கு ஒன்றுதான்.

அதேமாதிரி டாக்டர்களும் தங்களது கவனத்தை மேன்மேலும் வளர்த்து வருகிறார்கள். தேச முன்னேற்றம் இவர்களைவிடப் பதின் மடங்கு நம்மிடத்தில் இருக்கிறது என்று சொல்லக் கேட்டு வருகிறோம்; ஆகவே, குழந்தைகளின் தேக மன வளர்ச்சி, உலக முன்னேற்றம் இவைகளைக் கவனித்து, நமது குழந்தைககளுக்கு இனிக்காணப்படும் உலக அனுஷ்டானங்களுக்குத் தகுந்தபடிக்கும், பழையது, புதிது இவ்விரண்டிலும் உள்ள மேன்மையை விடாமலும் கைக்கொண்டு கல்வியைப் புகட்டும் மார்க்கங்களைத் தேடுவதே நமது பொறுப்பாகும்.

# புதுப் பள்ளிக்கூடம்

# THE NEW SCHOOL

எம். எஸ். ஸபேசன்

"புதுப்பள்ளிக்கூடம்", "புது உபாத்தியாயர்", "புதுப் படிப்பு" என்ற வார்த்தைகளை தற்காலம் அடிக்கடி கேட்கிறோம். எவ்விதத்தில் புதுமை யென்று சிலர் அறிய விரும்புவார்கள். மேலே கூறிய மொழிகள் கல்வி விஷயமாய் ஏற்பட்டிருக்கும் புது உணர்ச்சியைப் பொதுவாகக் குறிப்பன. கல்வியின் சீர்திருத்தங்களில் ஈடுபட்ட பெரியோர்கள் பள்ளிக்கூடங்களின் புது நோக்கத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அவர்களுடைய கொள்கை கவனிக்கத் தக்கது. பழைய முறையில் உபாத்தியாயரே பள்ளிக்கூடத்தின் முக்கிய அம்சமாக விளங்கினார். அவர் அதிகாரத்தின் அடையாளங்களை எங்கும் காணலாம். அவரைக் கண்டதும் பிள்ளைகள் நடுங்குவார்களென்று பலர் பாராட்டிப் பேசுவதுமுண்டு. புதுப்பள்ளிக்கூடத்திலோ குழந்தையின் கொடி பறந்துகொண்டிருக்கிறது. அதன் சௌகரியத்தையே பிறர் கவனிப்பதை நாம் பார்க்கலாம். குழந்தைகள் ஆசையுடன் எடுக்கும் பொருள்களை அங்கு அதிகமாய்ப் பார்க்கலாம். குழந்தையை பிரதானமாகக் கொள்ள வேண்டுமென்பது புதுப் பள்ளிக்கூடத்தின் கொள்கையாகும்.

ஆகவே, குழந்தையின் சுபாவத்தைக் கவனித்தல் அவசியமென்று சொல்லாமலே விளங்கும். பாட திட்டமும், போதிக்கும் முறையும் குழந்தையின் மனதையும் தன்மையையும் அநுசரித்திருப்பது அவசியம். தெரிய வேண்டிய விஷயம் முழுவதையும் குருட்டுப் பாடம் பண்ணுவது சரியான வழியல்லவென்று சொல்லுகிறார்கள். பல சாதனங்களையும் கருவிகளையும் செவ்வையாய் உபயோகித்து விஷயங்களைத் தானாகவே தெரிந்து கொள்ளும் வழியில் குழந்தையைப் பழக்குவது புது முறையின் முக்கிய நோக்கமென்று தெரிவித்திருக்கிறார்கள். குழந்தைகளை மேலே கூறிய வழியில் பழக்குவது புதுப் பள்ளிக்கூடத்தின் கடமையாகும்.

இத்தகைய பழக்கமே மேலானதென்றும் இந்தப் பொறுப்பை ஆசிரியர்கள் வகிக்க வேண்டுமென்றும் ஆராய்ச்சிக்காரர்கள் வற்புறுத்துகிறார்கள். இது சாதாரண காரியமென்று நினைப்பதற்கில்லை. குழந்தையின் சுபாவத்தையும், வளர்ச்சி முறையையும், மனதையும் அறிந்த ஆசிரியரே சரியான வழியில் குழந்தையைப் பழக்க முடியும். நர்ஸரி ஸ்கூல் (Nursery School), கின்டர் கார்டன் ஸ்கூல் (Kindergarten School) முதலிய பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைச் சரியான வழியில் பழக்கி வருவது யாவருமறிவார்கள்.

புதுப் பள்ளிக்கூடத்தில் சில முக்கிய குணங்களைக் காணலாம். எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் புது முறையைக் கையாளுவது கடினமாயிருக்கலாம். ஆயினும் புதுப் பள்ளிக்கூடத்தின் முக்கிய நோக்கத்தின் பெருமையை ஞாபகத்தில் வைத்திருப்பது பயனைத்தரும். முக்கியமாய் கவனிக்கக் கூடிய குணம் குழந்தைகளின் சுய முயற்சி (Self Activity). சாதாரணமாய்ப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் சொல்லிக்கொண்டு போவதை குழந்தைகள் காதால் கேட்டுச் சும்மாயிருக்கிறார்கள். ஒரு நாள் முழுவதும் இந்நிலையிலிருப்பது குழந்தைகளுக்கு முடியாத காரியம். பயத்தினால் அடங்கியிருக்கச் செய்தல் குழந்தைக்குப் பெரிய கெடுதலைச் செய்வதாகும். சுபாவத்தில் குழந்தைகள் அங்குமிங்கும் சென்று, அகப்படும் வஸ்துக்களைப் பரிசோதிக்கும் குணமுடையன. விளையாட்டில் விருப்பமில்லாக் குழந்தைகளைச் சரியான குழந்தைகளென நினைக்க கூடாதென்பது பெரியோர்களுடைய அபிப்பிராயம். விளையாட்டின் மூலமாய் குழந்தைகள் விஷயங்களைத் தெரிந்து கொள்ளும்படி ஆசிரியர் ஏற்பாடு செய்வது சரியான முறை. போதிக்கும் போது கண், கை முதலிய உறுப்புக்களையும் உபயோகிக்கும்படிச் செய்தல் அவசியமாகும். மூளைக்கு மாத்திரம் வேலையைக் கொடுப்பதால் சீக்கிரத்தில் களைப்புண்டாகி படிப்பில் சிரத்தை குறைந்துவிடும். ஆகையால் புதுப் பள்ளிக்கூடத்தில் குழந்தைகள் தடையின்றி விளையாடப் பல கருவிகளிருக்கின்றன. வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு குழந்தைகள் தனியாகவோ அல்லது பலர்சேர்ந்தோ விளையாடுகின்றன. விளையாட்டில்கவனமும்ஊக்கமும் சிரத்தையும் ஏற்படுவதுடன் மனதில் எண்ணியபடி கட்டடம் முதலியவற்றை முடிப்பதில் குழந்தைகள் ஆவலாயிருக்கின்றன. நாம் பேச்சுக் கொடுத்தாலும் அவைகளுக்குப் பேச மனமிருப்பதில்லை விளையாட்டே படிப்பாக உதவுகிறது. அப்போதைக்கப்போது ஏற்படும் கஷ்டங்களைக் குழந்தைகள் தாமே விலக்கிக் கொள்வதைப் பார்க்கலாம். உபாத்தியாயர் ஒரு மூலையிலிருந்து கொண்டு குழந்தைகள் விளையாடுவதையும், தத்தளிப்பதையும் ஸமாளித்துக் கொள்வதையும் கவனிப்பார். தாமாகவே கற்றுக்கொள்ளும் நிலையிலிருப்பதால் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் செல்வதில் சலிப்புண்டாவதில்லை. உபாத்தியாயர் குழந்தையின் நண்பராவர். அவரைக் கண்டு பயப்படும் தன்மை நீங்கிவிடும். தாமே கற்றுக்கொள்ளும் பழக்கம் மிகவும் மேலானது.

குழந்தைகள் தம்தம் விளையாட்டில் ஆழ்ந்திருப்பதால், அவர்களை அடக்கி வைக்க விதிகள் அநாவசியம். பேசாதே பேசாதே என்று அடிக்கடிச் சொல்ல வேண்டியதில்லை. பிரம்பை உபயோகிப்பதற்கும் சமயம் நேராது. சிறு வயதிலேயே பொறுப்பை வகிக்கும் பழக்கம் புதுப்பள்ளிக்கூடத்தில் ஏற்படுகிறது. சில்லரைச் சண்டைகளும் அபூர்வமென்றே தெரிய வருகிறது.

மேலும் புதுப் பள்ளிக்கூடத்தில் குழந்தையின் தேகப் பயிற்சியைக் கவனித்து வருகிறார்கள். தேகப் பயிற்சிக்காக ஏற்பட்ட காலம் வீணென்று பெற்றோர்களில் சிலர் நினைக்கிறார்கள். நம்முடைய பள்ளிக்கூடங்களில்

தேகப் பயிற்சிக்குரிய சாதனங்களில்லை; தெருக்களிலேயே குழந்தைகள் விளையாடுகின்றன. இதனால் அபாயம் நேரிடுவதுடன் தேக சௌக்கியத்திற்கும் கெடுதியுண்டு. அதிகாரிகளும் மானேஜர்களும் தேகப்பயற்சிக்குச் சௌகரியங்களைச் செய்து கொடுத்தல் அவசியம்.

கடைசியாக புதுப் பள்ளிக்கூடத்தில் பாடங்களும் குழந்தையின் அநுபவத்தைத் தழுவி யிருப்பன. கணக்குப் பாடத்தில் சொல்லுகின்ற சாமான்களும், எண்களும், காரியங்களும் குழந்தைகளின் அநுபவத்தை யொட்டினதாகவே யிருப்பன. மனதால் நினைக்க கூடாத எண்ணையோ, காரியத்தையோ சொல்லுவதால் குழந்தைகளுக்குக் குழப்பம் ஏற்படும்.

புதுப் பள்ளிக்கூடத்திலுள்ள் புது ஆசிரியர்கள் முறையைஅனுஷ்டிப்பதால் குழந்தைகள் சிரத்தையுடன் கல்வி கற்று பள்ளிக்கூடத்திற்குப் பிரியத்துடன் காலத்தில் தாமாகவே செல்லக்கூடும். ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்திற்கு புது உணர்ச்சியிலீடுபட்ட ஆசிரியர்கள் பேருதவி செய்யக்கூடும்.

# சித்திரா விசித்திரம்

நாடகமேடை யொன்றில் ஓர் விதூஷகன் கிளிபோல் கத்தி ஜனங் களைச் சந்தோஷிப்பித்தான். நாடகம் பார்க்க வந்த ஒட்ட னொருவனுக்கு மட்டும் வெறுப்பா யிருந்தது. தானும் அம்மாதிரி கத்தக் கூடுமென்று வாதித்து, மறுநாள் கிளி யொன்றை மறைத்து வைத்துக்கொண்டு மேடையின்மீது ஏறினன். கிளியின் காதைக் கிள்ளவும், அது கத்த ஆரம்பித்தது. அது கேட்டும், சபையோர் விதூஷகனையே கொண்டாடினர் கள். ஒட்டனுக்குக் கோபம் வந்து சபைக்குக் கிளியைக் காட்டினன். அனைவரும் வெட்கி மௌனமானர்கள். ஆகவே, நிஜக் கிளியைவிட பொய்க் கிளிக்கே கௌரவம் அதிகம் என்பது விளங்குகிறது. நூற்றுக் கணக்கான பொன், வெள்ளி பொம்மைகளைவிட, கொலுவில் வைக்கப்பட்டிருக்கும் களிமண் காக்கையிடமே மனம் செல்லுகின்றது.

சித்திரம் என்பது யாரால், எப்பொழுது ஏற்பட்டதென்று சொல்ல முடியாது. விவரிக்க முடியாத விஷயங்களைச் சித்திரமூலமாய் ஆதிகால முதல் விளக்கி வந்தார்கள். சித்திரங்களே எண்ணெழுத்து ஏற்பட்டதற்கு ஆதாரம். எகிப்திலுள்ள 'ஹிராக்ளிபிக்ஸ்' என்ற சித்திரபாஷை போற்றத்தக்கது. அக்ஷரங்கள் ஏற்படுவதற்கு முன்பு ஜனங்கள் வெகு கஷ்டப் பட்டிருப்பார்கள். ஒரு விஷயம் பேசுவதற்கு நூற்றுக் கணக்கான சித்திரங்களையும், ஜாடைகளையும் உபயோகப்படுத்தி யிருக்கவேண்டும். இராவிடில் மிட்டாய்ப் பெயர் தெரியாமல், 'இது கொடு, அது கொடு' என்று ஒவ்வொரு தட்டையும் காண்பிப்பது போலாகும். சித்திரம், புகைப்படம், மின்சாரம் இவைகள் ஏற்பட்டபின் உலகம் தற்சமயம் எவ்விதம் மாறிவிட்டது பாருங்கள்:

இயற்கைச் சித்திரம், செயற்கைச் சித்திரம் என்று சித்திரத்தை இருவகையாகப் பிரிக்கலாம். சூரிய சந்திரோ தயாஸ்தமனங்கள், மலை, கடல் ஏரி யாறுகள், காடு மேடு வானவில் லாதிகள், மிருக பக்ஷி கிருமியாதிகள் முதலிய சித்திரங்கள் இயற்கையில் சேர்ந்தவை. நகை நகாசுகள், மரதந்தஸ் படிகங்களில் சிற்ப வேலைகள், பாத்திரம், வஸ்திரம் முதலியவற்றில் தீர்க்கும் சித்திரங்கள் தேவஸ்தானிடச் சிலைகள், கோபுரம், ரதம் போன்றவைகளில் செதுக்கும் சித்திரங்கள், அழகுள்ள மாளிகைகளும், நந்தவனங் களும் ஆகிய இவை செயற்கையில் சேர்ந்தவை. எந்தச் சித்திரத்திலும், செடி, கொடி, பூ, பழம் பக்ஷி முதலிய இயற்கைச் சித்திரங்களே காணப் படுகின்றன.

புகைப் படங்கள் மூலமாய்ப் பல தேசங்களை யறிவதுபோல், ஆதி காலத்திலும் தேவர், கந்தருவர், பிசாசு, ராக்ஷஸன், கடவுள் முதலிய காண வஸ்துக்களையும் எழுதி வைத்திருக்கின்றனர். ஜப்பானிய பொம்மைகளும், பாரிஸ் உடுப்புக்களும், தென்னிந்தியப் புடவைகளும், நகைகளும், வாகனங் களும், ரத்தின கம்பளங்களும், மண்டப சித்திரங்களும் பெயர் போனவை. இவையனைத்தும் சித்திர சம்பந்தமானவையே. சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரிய கிழவிகளுக்கும் சித்திரம் இன்ப மளிக்கும்.

சித்திர சாதனங்களும் பலவிதம். நிறமுள்ளவை, இல்லாதவை, நீர்ச்சித்திரம், பால் சித்திரம், தைல சித்திரம், பிசின் சித்திரம், புகைச் சித்திரம், மாவு கோலம், ஒட்டுச் சித்திரம், வெட்டுச் சித்திரம் முதலியன. ஓவியக்காரருக்குச் சித்திரச்சாலேயே மோக்ஷம், உபாத்தியார்களுக்கு இன்றியமையாத சாதனம். இரண்டொரு சித்திர முறைகளை மட்டும் சாதக நிமித்தம் விளக்குகிறேன்.

1. புகைச் சித்திரம் :—சிறுவர்களும் இதை எளிதில் அப்பியசிக்கலாம். இயற்கைப் பாடத்திற்கு அவசியமானது. இலைகளையும், புஷ்பங்களையும் உள்ளபடியே வரையலாம்.

முறை :—கால் காகிதத்தில் ஒரு புறம் நல்லெண்ணெயைத் தடவி, கிரிஸின் விளக்குப் புகையைப் பிடிக்கவேண்டும். தேவையான இலை அல்லது பூவை அந்தக் காகிதத்தின்மேல் வைத்து இலேசாக அழுத்த, அவற்றின், நரம்புகளில் புகைக்கரி ஒட்டிக்கொள்ளும். அவற்றை மெதுவாக எடுத்து டிராயிங் புத்தகத்தில் பதியவைத்தால் நல்ல உருவம் உண்டாகும். நேர் நரம்பு, வலை நரம்பு, ஓரங்கள், வடிவம் முதலிய விவரங்களைக் கீழே எழுதிக்கொள்ளலாம். (சிறுவர்கள் இவ்வேலையைச் செய்யும்போது பார்த்திருந்த ஒரு இன்ஸ்பெக்டர் மிகவும் புகழ்ந்திருக்கிறார்.)

2. பால் சித்திரம் :—எந்தச் செடியினுடைய பாலையாவது கொண்டு வந்து காகிதத்தில் உருவத்தை எழுதிக்கொள்ளவும். அது காய்ந்ததும் உருவத்தைப் பார்க்கமுடியாது. சாதாரண கரித்தூளை அதன்மீது தூவ, சித்திரம் பிரகாசிக்கும். இவ்வித்தையை ஜால வித்தைக்காரர்கள் அநுஷ்டிக்கிறார்கள். (ஒரு சமயம் ஸர். ஸி. பி. ராமசுவாமி அய்யர் ஒரு கூட்டத்திற்கு அக்ராசனம் வகித்தபோது இச்சித்திரத்தைக் காட்டியிருக்கிறேன். பல ஐரோப்பிய ஸ்திரீகளும் இம்மந்திரத்தைக் கண்டு திகைத்தனர்.)

3. பிசின் சித்திரம் :—வேலம் பிசினால் தேவையான சித்திரம் வரைந்து காயவைக்கவேண்டும். கிரிஸின் புகைக்கரி அல்லது வர்ணத்தூள்கள் கொண்டுவந்து, கிரிஸின் எண்ணெயிலேயே கலந்து, காகித முழுமையும் பூசவேண்டும். சற்று நேரம் காயவைத்து, நீரினால் மெதுவாகக் கழுவவேண்டும். அப்பொழுது கறுப்புத் தாளில் வரைந்த வெண்மைச் சித்திரம் போலாகும்: (இதற்கும் பெருமையில்லாமல் போகவில்லை. ஜம்னுதாஸ்துவரகதாஸ், மங்களூர்ப் பாடசாலைத் தலைவர், மற்றும் சில ஐரோப்பிய ஸ்திரீகளுக்கும் வியப்பைத் தந்திருக்கிறது).

4. போலிப் போட்டோ :—மேற்கூறிய பிசின் சித்திரத்தின்மீது கரிக்குப் பதிலாக, பென்சிலால் கீறிக் கறுப்பாக்கிக் கழுவினால் புகைப்படம் போலவே இருக்கும். இவற்றால் கதைகளை விளக்கவும், பூகோளப் படங்கள் வரையவும், காபி பாரம் எழுதவும் கூடும்.

இவை போன்ற விசித்திர முறைகள் பல உண்டு. அவகாசமிருந்தால் உற்சாகமாகவும், உபயோகமாகவும், இருக்கும். ஆசிரியர் மூலமாகப் பின்னும் பல முறைகளை எதிர்பார்க்கிறேன். —அ. ஸ்ரீ.

# போதனு முறை

போதனு முறை என்ருல், படிப்பைச் சொல்லி வைப்பதற்கு ஏற்பட்ட வழி என்று பொருள் ஏற்படுகிறது. பழய காலத்தில் போதனு முறைகள் ஓர் அழகான வழியுடன் கையாளப்பட்டு வந்தன. தற்காலத்திலோ அவைகள் முழுமையும் மாறுபாடுகளை யடைந்திருக்கின்றன வென்பது நாம் அறிந்த விஷயமே. அக்காலத்திலோ உபாத்தியாயர்கள் குழந்தைகளுக்கு முதன் முதலில் அக்ஷராப்யாஸத்தைப் பூமியில் மணலையோ, தவிட்டையோ போட்டுப் பரப்பி அதில் எழுதச்சொல்லியும், வாயால் சொல்லச்சொல்லியும், செய்து வைத்து வந்தார்கள். அதோடுகூட எதையும் நன்ருக நெட்ரு பண்ணும்படி செய்து மனப்பாடம் செய்துவைத்தும், மேல் மேல் கிரமமாகப் பாடங்களைக் கற்பித்தும், பழய பாடங்களை ஒப்பிக்கச்செய்தும், பிறகு புதிய பாடங்களைச் சொல்லிவைத்தும், இந்தப் பிரகாரமாக 4 படி ஏறியவுடன் அவர்களையே பல கேள்விகளைக் கேட்டும், அவர்கள் வாயாலேயே பதில் வரும்படியான வழிகளையும் கைப்பற்றி வந்தார்கள்.

"குரோஸ்து மௌநம் வ்யாக்யாநம்
சிஷ்யஸ்து ச்சின்னஸம்சய:"

என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள். (அதன் கருத்து:—குரு வாய் பேசாமல் பாடங்களை விவரிப்பது. சிஷ்யனே அவைகளில் கொஞ்சமேனும் ஸந்தேஹம் கொள்ளாமலிருப்பது என்பது.)

குரு வாய்பேசாமல் பாடத்தை விவரிப்பதாவது-கேள்விகளைக் கேட்டுச் சிஷ்யன் வாயினுலேயே எல்லா விஷயங்களையும் வெளிவரும்படி செய்வது, என்பது.

அவ்வித பழக்கங்கள் இக்காலத்தில் சில சில இடங்களில்தான் காணப்படுகின்றன. மொத்தமாக ஓரிடத்திலும் இல்லை யென்றும் ஒரு வகையில் சொல்லத்தகும்.

அதற்குக் காரணம், புஸ்தகங்களதிகம். அவைகளில் பாடங்களும் அதிகம். மணியும் (பீரியட்) குறைவு. உபாத்தியாயர் என்ன பண்ணுவார்? அப்படியே பாடங்களை ஒப்பிக்கும்மாதிரி ஒப்பித்துவிட்டு, நோட்ஸ் என்று சில குறிப்புக்களையும் எழுதிக்கொள்ளும்படி கொடுத்துவிட்டு "இவைகளை நன்ருகப் படித்து வைத்தாலே பரீக்ஷையில் தேறிவிடலாம்" என்றும் உபதேசித்துவிட்டு, கேள்வி கேட்கிறவர்களையும் "இந்தமாதிரி கேள்வி கேட்டால்தான் எங்கள் குழந்தைகள் எழுதும். நீங்கள் அதேமாதிரி தய்வு செய்து கேள்விகளைக் கேட்கவேண்டும்" என்றும் பிரார்த்திக்கிருர்கள். சிஷ்யர்களும் பாடங்

களைப் படிக்காமல் குறிப்புக்களைமாத்திரம் படித்து விடுகிறார்கள். ஆனால் அந்தப் புஸ்தகத்தில் முழுஜ்ஞானம் உண்டாவது என்பது இல்லாமல் போய்விடுகிறது.

பிறகு B.A. முதலான கிளாஸில்போய்ச் சிரமப்படுகிறார்கள். அதனால் தான் "முன் காலத்து மெட்ரிகுலேஷன் படித்தவர்களுக்கு ஸமமாக மாட்டார்கள் இக் காலத்திலிருக்கும் B. A. பாஸ் பண்ணினவர்கள் என்று அநேகமாகப் பெரிய வித்வான்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். முன் காலத்தில் B. A. பாஸ் பண்ணிவிட்டால் 'B.A.' என்ற பட்டத்தைத் தன் பெயருக்குக் கடைசியில் அமர்த்திக்கொள்ளுகிறார்கள். அவர்களை மிகவும் இதரர்கள் மதித்தும் வந்தார்கள். இக்காலத்திலோ (B. A.) அவர்களை அவ்வளவு கொண்டாடுவதில்லை. ஏனென்றால், இக்காலத்தில் அதைப் பாஸ் பண்ணுகிறவர்களைக் கணக்கு எடுக்க முடியாது. முன் அப்படி வந்தவர்கள் சிலர்களே! அதற்குக்காரணம், படிப்புக் குறையும் புஸ்தகத்தின் உயர்வு தாழ்வு என்ற க்ரமமுமில்லாமலிருப்பதுதான்.

ஆகையால் பழய முறைகளைக் கைக்கொண்டால் ஜ்ஞானவ்ருத்திக்குக் காரணமுண்டு. சிஷ்யர்கள் ஆரம்பக் கிளாஸில் நெட்ரு போட்டுவைத்த பாடங்கள் மேல் மேல் போக நினைவில்வந்து விமர்ச சக்தியை உண்டுபண்ணி ஜ்ஞானத்தையும் அதற்குண்டான ப்ரதிபையையும் ஏற்படுத்தி விடும். முதலிலேயே சிஷ்யர்களை விமர்சநத்தில் பழக்கி வரக்கூடாது. அப்படி வந்தால் விபரீதமான புத்தி ஏற்பட்டுவிடும்.

இந்தவிதம் எந்தப் பாஷைகளுக்கும் உண்டு. தற்காலத்திலே முற்றும் மாறுதல்களை அடைந்துவிட்டன. இந்தவிதம் இன்னம் அநேக வித்யாஸங்களுள்ளன. விவரிப்பதென்றால் பெருகும்.

தவிர, உபாத்தியாயர்களும் முன்காலத்தில் மிகவும் சிரத்தையுடனிருந்து வந்தார்கள். குழந்தைகள் சொல்லிவைத்த பாடங்களை மறுநாள் நன்றாக ஒப்பித்துவிட்டால், அவர்கள் பேரானந்தத்தை யடைந்து வந்தார்கள். இக்காலத்தில் தனமே ப்ரதானமாகக்கொண்டு விடுகிறார்கள். ஊதியம் வாங்கிக் கொண்டாலும் காரியத்தில் சிரத்தையுடனிருக்கவேண்டும். சிரத்தை உள்ளவர்களுக்கு எதிலும் நல்ல பெயருண்டு. படிப்புத் தொழிலைப்போல் புண்யமான தொழில் வேறொன்றுமே கிடையாது. அநேக குடும்பங்களைக் காப்பாற்றினாற்போல் ஆகிறது. அதற்கும் பழமையான முறைகளையே கைக்கொள்ள வேண்டும். அதிலும் சிரத்தையையே பிரதானமாகக் கைக்கொண்டுவிட வேண்டும். இவ்வுலகமே சிரத்தையால்தான் நடந்து வருகிறது. அதுவும் படிப்படியாகக் குறைந்துகொண்டு வருகிறது. அதனால் பணத்துக்குத்தகுந்த பாடம், கூலிக்குத்தகுந்த வேலை, மனிதனுக்குத் தகுந்தபடி வேஷத்தோடு செய்யும் காரியங்கள், இவை அதிகரித்து வருகின்றன.

சிஷ்யர்களும் முன்காலத்தில் மரியாதை, பக்தி சிரத்தையுடனிருந்தார்கள். இக்காலத்தில் அவைகளும் மாறுதல்களை அடைகின்றன. அதற்குக்

காரணம் "இவரில்லாவிட்டால் வேறு ஒருவரிடம் பணத்தைக்கொடுத்தால் தானுக வீட்டுக்குவந்து காரியங்களைச் செய்துகொடுக்கிறூர்கள். பாடத்தையும் சொல்லிவைக்கிறூர்கள்." என்ற எண்ணமும் ஜனங்களுக்கு உண்டாகி விடு கின்றன. இதனுல் ஏழைகளுக்கு மிக்க சிரமங்கள் அதிகரித்துக்கொண்டேவரு கின்றன. பணங்கொடுத்த சிஷ்யன் உபாத்தியாயருக்கு அதிகமான பிரீதிக்கு லக்ஷ்யமாகிறுன். அப்போது ஏழையின் கதியை என்னே சொல்வது! ஏழை களுக்குப் படிப்பையே விருத்திசெய்ய ஏற்பாடுசெய்துவரவேண்டும். சிஷ்யர் களுக்கு உபாத்தியாயரிடம் பக்தி, மரியாதை, நன்னடவடிக்கை, இவைகளைப் போதித்து வர வேண்டும். பள்ளிக்கூடத்துக்கு வந்த குழந்தைகள் மறுபடி யும் வீட்டுக்குத்திரும்பிப் போகிறவரையிலும் குழந்தைகளின் ஸர்வ க்ஷேம லாபங்கள் உபாத்தியாயரையே பொறுத்ததாகும். குழந்தைகளுக்கு உபாத்தி யாயரிடத்தில் ஓர் நிரதிசயமான அன்பு இயற்கையாகவே உண்டாகவேண்டும். அதற்கு உபாத்தியாயர்கள் தாங்கள் அவர்களுக்கு நன்னடவடிக்கைகளைப் போதித்தும், காண்பித்தும் வரவேண்டும். இவ்விதமாக உபாத்தியாயர்க ளிருந்துவந்தால் உலகத்துக்கே ஸகலக்ஷேமங்களுண்டாகும் என்பதில் ஸந் தேகமே கிடையாது. அத்துடன் உபாத்தியாயர்கள் ஒவ்வொருவரும் ஒற் றுமையுடனிருந்து வரவேண்டும். "ஸங்கே சக்தி: கலௌயுகே" என்று பெரியோர்கள் கூறியுள்ளார்கள். இந்தக்கவியின்பொருள் கூட்டத்திற்குத் தான் பலம். பிரிந்தால் இதரர்கள் உட்புகுந்து கலக்க இடமுண்டாகிறது என்பதாம். ஆதலால் உபாத்தியாயர் நல்லமனதுடனும் ஒருவர்க்கொரு வர் உபகார புத்தியுடனும், சிரத்தையுடனும் நன்னடவடிக்கையுடனும் இருந்தால் ஸகல ஸௌகர்யங்களு முண்டாகும். மற்றும் சிஷ்யனிருக்க வேண்டிய முறையை அடுத்த இதழில் எழுதுகிறேன். பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் குழந்தைகள் 20-க்கு மேல்படாம லிருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் உபாத்தியாயர்கள் குழந்தைகளை நன்முகக் கவனிக்க முடியும். மந்தை மந்தையாகச் சேர்த்துக் கூட்டம்போட்டு வைத்துக்கொள் வது என்பது கூடவே கூடாது, என்பதையும் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

# தையல்

தையல் தைப்பதினால் அநேக நன்மைகள் உண்டு, நம்முடைய உடைகள் கிழிந்து இருந்தால், அதைத் தைத்துக்கட்டவும், புது துணிகளை வாங்கி அதைக் கூலி இல்லாமல் நாமே தைத்துக் கொள்ளவும், மற்றவர்களுக்கும் தைத்துக் கொடுத்து அதனால் நாம் ஜிவனம் செய்து கொள்ளவும் உதவியாக இருக்கும்.

## எம்பிராய்டரி.

### பட்டுநூல், உல்நூல், இவைகளினால் செய்யும் முறைகள்.


தையல் தைக்கும் பல விதங்களைப் பற்றியும் ஊசி, நூல், முதலியவைகளை எப்படி எடுத்துக் கொள்வதென்பதற்கும், சில முக்கியமான அறிக்கைகள் உண்டு; அதாவது :—


(1) தையல் வேலைகளைச் செய்யும்போது நீங்கள் செய்யும் படியான சாமானை உங்கள் வலதுகையில் சாய்வாகப் பிடித்துக்கொண்டு, விரல்களின் மேல் நூலை விட்டுக்கொண்டு தைத்தால் நூல் கெடாமல் சுலபமாய்த் தைக்க வரும்.

(2) தையல் வேலை செய்யும்போது கைகள் சுத்தமாய் இருக்க வேண்டும். வெளிச்சம் பின் புறத்தில் தெரியும் படியாக உட்கார்ந்து தைத்தால் கண்ணுக்குக் கெடுதல் நேராது.

(3) தையல் தைக்கும்போது நடுவிரலில் அங்குஸ்த்தான் போட்டுத் தைக்க வேண்டும் உல்லை (Wool) கையால் அறுக்கக் கூடாது:

(4) எந்தெந்தத் தையலுக்கு எந்தெந்த ஊசி உபயோகிக்கிறது என்றும், எவ்விதமான நூல்களை உபயோகிப்பது என்றும் முன்னதாகக் கவனிக்க வேண்டியது.






## பலவிதமான எம்பிராய்டரி சித்திரமும் தைக்கும் முறைகளும்

இந்த வேலைக்கு ஒரு துண்டு துணியை எடுத்து அதில் நமக்கு வேண்டிய சித்திரம் வரைந்துகொண்டு, பிறகு இந்தத் தையலுக்கு ஊசியை சாய்வாகக் குத்தவேண்டும். எவ்விதமான நூலையும் உபயோகிக்கலாம். ஆனால் இதற்குக் கொஞ்சம் உறுதியான துணியாய் இருந்தால் நலமாய் இருக்கும்; இந்தத் தையலுக்குத் தகுந்த வர்ண நூலால் தைத்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

### Daisy Stitch




முதலில் இடது கையின் கட்டைவிரலினால் நூலை அடியில் பிடித்துக்கொண்டு சங்கிலித் தையலைப்போல் தைக்கவும். இது A என்ற படத்திலிருக்கிறது; மறுபடியும் ஒரு சிறிய தையலானது ஒரு சுழியைச் சேர்த்துக்கொண்டு தையல் தைத்து இழுத்து தைக்கவேண்டும். இது B என்ற படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. தையல் முடிந்ததும் 'C' என்ற படத்தில், காட்டியிருப்பது போல் இருக்கும்.

இந்தத் தையலில், முதலில் வலது கையின் கட்டை விரலினால் அடியில் நூலைப் பிடித்துக்கொண்டு, ஊசியை, அடியில் போகும்போது குத்தி இழுக்கவும்; ஆனால் தையலோடு தையல் ஒன்றாகச் சேர்த்து, சேருவது போல் தைக்கவேண்டும். இந்தத் தையலைக்கொண்டே இன்னும் பெரிய பெரிய எம்பிராய்டரி தையலும் தைக்கலாம்.

# விளையாட்டிலும் படிப்பு

## குழந்தைகளின் ஒழிவு நேரமும், உல்லாசமான பொழுதுபோக்கும்

### 2. நெருப்புப் பெட்டிப் படங்களைச் சேகரித்தல்

*குழந்தைகளே,*

*இக்காலத்தில் நெருப்புப் பெட்டியில்லாத வீடு கிடையாது. நாம் எத்தனையோ நெருப்புப் பெட்டிகளை வாங்கி, குச்சிகள் ஆனவுடன் பெட்டிகளை எறிந்து விடுகிறோம். அப்பெட்டிகளின்மீது அழகான படங்கள் காணப்படுகின்றன.*




*இப்பெட்டிகளின் மீது* "Safety Match" *"பத்திரமான நெருப்புக் குச்சி" என்று எழுதப்பட்டிருக்கிறதைப் பாருங்கள். இவை போன்ற பெட்டிகளிலுள்ள குச்சிகளை அப் பெட்டிகளின் பக்கத்தில் தடவியுள்ள மருந்தின்மேல் கிழித்தால்தான் அவை தீப்பிடித்து எரியும். மேலும் இவை நமது தேசத்தில் பல பாகங்களில் செய்யப்பட்டு வருகின்றன.*


*நடுவிலுள்ளதில் "சுதேசி" என்று எழுதியிருக்கிறதைக் கவனியுங்கள். வலது பக்கத்திலுள்ளது திருவாங்கூர் இராஜ்யத்தில் செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் சென்னையில் நெருப்புக் குச்சிகள் செய்து வருகிறார்கள்.*

**சில விநோதமான படங்கள்.**

*நீங்கள் நெருப்புப் பெட்டிப் படங்களைச் சேகரம் செய்வதில் ஆசையுள்ளவர்களா? அப்படியானால் அப் படங்கள் கிடைக்கிற சமயத்தில் அவைகளைச் சேகரம் செய்யுங்கள். அவைகளில் கட்டுமரம், மாம்பழம், தென்னை மரம், யானை, சிறுத்தை வேட்டை, குதிரைத்தலை, ஸ்ரீ கிருஷ்ணு, ஹனுமான், கலைமான் என்று பல வகையான விநோதப் படங்கள் இருக்கின்றன*

நீங்கள் இவைகளைச் சேர்த்து மரம், பழம், மிருகம், பக்ஷி, புஷ்பம், சாதாரண சாமான், மனிதர், ஸ்திரீகள் என்று பலவாறு பிரித்து ஒட்டுவது நேர்த்தியாய் இருக்கும்.




முதலில் நெருப்புக் குச்சிகள் ஐரோப்பா கண்டத்திலுள்ள ஸ்வீடன் தேசத்தில் செய்யப்பட்டு வந்தன, பத்திரமான குச்சிகள் இப்பொழுது 20, 25, வருஷ காலமாகத்தான் வழங்கி வருகின்றன. நீங்கள் "மூன்று நக்ஷத்திரம்" போட்ட பெட்டி பார்த்திருக்கிறீர்களா? அதுதான் ஸ்வீடன் தேசத்துப் பெட்டி. அதிலுள்ள குச்சிகள் கொஞ்சம் தடிப்பாய் இருக்கும்.

**கந்தகக் குச்சிகள்.**

பத்திரமான குச்சிகளைக் கண்டுபிடிப்பதற்கு முன் கந்தகக் குச்சிகள் தான் வழங்கி வந்தன. முக்கியமாக அப்பெட்டிகளின்மீது இரண்டு வெள்ளாடுகள் போடப்பட்டிருக்கும். அவை இப்பொழுது அரிதாகிவிட்டன. குச்சிகளின் தலையில் சிவப்புக் குல்லா போட்டதுபோல் சிவப்பு மருந்து தடவப்பட்டிருக்கும். அக் குச்சிகளை எந்த இடத்தில் தேய்த்தாலும் தீப் பிடித்துக்கொள்ளும். தப்பித்தவறி குழந்தைகள் வேடிக்கையாகக் கிழித்தாலும் நெருப்புப் பிடித்துக்கொண்டுவிடும். அது அபாயகாமானது. இம்மாதிரி நெருப்புப் பெட்டிகளின் படம் அகப்பட்டால் சேகரம் செய்யுங்கள்.

**மத்தாப்புப் பெட்டி**

தீபாவளி, கார்த்திகைக் காலங்களில் எவ்வளவோ மத்தாப்புப்பெட்டிகள் நீங்கள் வாங்கிக் கிழிக்கிறீர்கள். நீங்கள் அப் பெட்டிகளிலுள்ள படங்களைச் சேகரிக்கலாம். அப் பெட்டிகளைக்கூடச் சேகரம் செய்து அவைகளைக் கொண்டே ஓழிந்த நேரங்களில் மேஜை, உடுப்புப் பெட்டி, அலமாரி இவை போல் செய்துகொள்ளலாம்.

உங்களது நெருப்புப் பெட்டிப் படங்களைப் பார்த்து நெருப்புக் குச்சிகள் எந்த ஊர்களில் செய்யப்படுகின்றன என்று நீங்கள் சொல்லுவீர்களா?

# தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி

(1928-ல் ஸ்தாபிக்கப்பட்டது)

---

41, சிங்கராச்சாரித் தெரு,
திருவல்லிக்கேணி,
15-4-1936.

சகோதரர்களே,

'பாலர் கல்வி' பங்குனிமீ மலரில் தென் இந்திய ஆசிரியர் ஐக்கியக் காப்பு நிதி, இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளைக் காட்டிலும் லாபகரமானது என்று எழுதினேன். இதைச் சற்று விவரமாக இங்குக் கவனிப்போம்.

35 வயதுள்ள ஒருவன் 25 வருஷ என்டோமென்ட் இன்ஷ்யூரன்ஸ் ரூ. 1,000-க்கு வருஷந்தோரும் ரூ. 41—12—0. சந்தா (Premium) கட்ட வேண்டும். இந்த நிதியில் வருஷந்தோறும் ரூ. 50 கட்டினால் 25 வருஷ முடிவில் 1,500-ம் லாபம் ரூ. 300—ரூ. 400-ம் பெறலாம். இந்த 25 வருஷ முடிவிற்குமுன் மரணம் சம்பவித்தாலும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிலிருந்து அடையும் தொகையைக் காட்டிலும் அதிகம் அடையலாம். (அடுத்த பக்கத்தில் விவரம் காண்க.)

இதுவும் தவிர 5 வருஷத்திற்கு மேற்படாமல் ஒருமுறை நிதியின் ஆஸ்தி ஆக்சுவரியால் (Actuary) நிர்ணயிக்கப்படும். அவர் சிபார்சின்மேல் மெம்பர்களுக்கு மேற்கூறிய தொகைக்குமேல் போனஸ் (Bonus) கொடுக்கப்படும். ஆகவே ஒருவர் இன்ஷ்யூரன்ஸில் வருஷம் ரூ. 41—12—0 வீதம் ரூ. 1,043—12—0 கட்டி ரூ. 1,000 பெறுகிறார்; இந்த நிதியிலோ ரூ. 1,250 கட்டி ரூ. 1,800—ரூ. 1,900 பெறுகிறார். இந்த நிதியே உபாத்தியாயர்களுக்கு லாபகரமானது என்பதில் சந்தேகமில்லை.

| வருஷம் | இதர இன்ஷ்யூரன்ஸ் | | | காப்பு நிதி | | | காப்பு நிதியில் சேருவதால் உள்ள லாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| | வருஷச் சந்தா | வருஷ முடிவில் கொடுபடும் தொகை | மரணத் தொகை | வருஷச் சந்தா | வருஷ முடிவில் கொடுபடும் தொகை | மரணத் தொகை | |
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| 1 | 41—12—0 | 41-12—0 | 1000 | 50 | 50 | 1000 | |
| 2 | ,, | 83—8—0 | ,, | ,, | 100 | 1020 | 3—8—0 |
| 3 | ,, | 125—4—0 | ,, | ,, | 150 | 1040 | 15—4—0 |
| 4 | ,, | 167—0—0 | ,, | ,, | 200 | 1060 | 27—0—0 |
| 5 | ,, | 208-12—0 | ,, | ,, | 250 | 1080 | 38-12—0 |
| 6 | ,, | 250—8—0 | ,, | ,, | 300 | 1100 | 50—8—0 |
| 7 | ,, | 292—4—0 | ,, | ,, | 350 | 1120 | 62—4—0 |
| 8 | ,, | 334—0—0 | ,, | ,, | 400 | 1140 | 74—0—0 |
| 9 | ,, | 375-12—0 | ,, | ,, | 450 | 1160 | 85-12—0 |
| 10 | ,, | 417—8—0 | ,, | ,, | 500 | 1180 | 97—8—0 |
| 11 | ,, | 459—4—0 | ,, | ,, | 550 | 1200 | 109—4—0 |
| 12 | ,, | 501—0—0 | ,, | ,, | 600 | 1220 | 121—0—0 |
| 13 | ,, | 542-12—0 | ,, | ,, | 650 | 1240 | 132-12—0 |
| 14 | ,, | 581—8—0 | ,, | ,, | 700 | 1260 | 144—8—0 |
| 15 | ,, | 626—4—0 | ,, | ,, | 750 | 1280 | 156—4—0 |
| 16 | ,, | 668—0—0 | ,, | ,, | 800 | 1300 | 168—0—0 |
| 17 | ,, | 709-12—0 | ,, | ,, | 850 | 1320 | 179-12—0 |
| 18 | ,, | 751—8—0 | ,, | ,, | 900 | 1340 | 191—8—0 |
| 19 | ,, | 793—4—0 | ,, | ,, | 950 | 1360 | 203—4—0 |
| 20 | ,, | 835—0—0 | ,, | ,, | 1000 | 1380 | 215—0—0 |
| 21 | ,, | 876-12—0 | ,, | ,, | 1050 | 1400 | 226-12—0 |
| 22 | ,, | 918—8—0 | ,, | ,, | 1100 | 1420 | 238—8—0 |
| 23 | ,, | 960—4—0 | ,, | ,, | 1150 | 1460 | 250—4—0 |
| 24 | ,, | 1002—0—0 | ,, | ,, | 1200 | 1480 | 262—0—0 |
| 25 | ,, | 1043-12—0 | ,, | ,, | 1250 | 1500 | 273-12—0 |

*எந்தக் காரணங்களால் இந்த அதிக தொகை கொடுக்க முடியும் என்பதை அடுத்த மலரில் காணலாம்.*

*விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—*

கௌரவ காரியதரிசி,

**தென் இந்திய ஆசிரியர் ஐக்கியக் காப்பு நிதி,**

**41**, *சிங்காராச்சாரித் தெரு,*

*திருவல்லிக்கேணி, மதராஸ்.*

# கல்விச் செய்தியும் குறிப்பும்.

பேன்னகரம்

சென்ற மார்ச்சுமீ 28வ பென்னகரம் போர்டு பெண் பாடசாலைத் தாய்மார்ச் சங்கத்தின் 3வது கூட்டம் ஸ்ரீமதி பீ. கே. மனோரஞ்சிதம் அம்மாள் தலைமையில் நடைபெற்றது. சங்கக் காரியதரிசி ஸ்ரீமதி எம். ஞானம்மாள் 'தையல்' என்பதைப்பற்றி உபந்நியாசம் செய்தார். பல தீர்மானங்களும் நிறைவேறின.

மலே உழவூர்

இவ்வூர் ஆரம்பக் கல்லூரி ஆசிரியச் சங்கத்தின் கூட்டமொன்று மார்ச்சுமீ 28ந் தேதி பகலில் ஸ்ரீ. எஸ். ரங்கசாமி வாண்டையார் தலைமையில் கூடியது. வழக்கமான நடவடிக்கைகளுக்குப் பிறகு பின்வரும் தீர்மானங்கள் நிறைவேறின.

(1) ஸ்ரீ. க. நமசிவாய முதலியார் மரணத்துக்கு இச்சங்கம் அனுதாபந் தெரிவிக்கிறது. (2) ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகள் சம்பளத்தில் பிடித்தம் கூடாதென அறிவித்த சென்னை முதன் மந்திரியை ஆதரிக்கிறது. (3) இது வரையில் பிடித்தம் செய்துவந்த தொகைகளை ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கே திருப்பிக் கொடுக்க வேண்டுகிறது. (4) ஆசிரியர்கட்கென்று ஒரு கூட்டுறவுச் சங்கம் வேண்டுமெனக் கோருகிறது.

வேலூர்

சென்ற 19—4—36ல் வேலூர் 'காப்' ஹாலில் வேலூர் ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர்களின் மகாநாடு ஒன்று நடந்தது. ஜில்லா கல்வி அதிகாரி ஜனப் ஷேக் டாவூட் சாஹிப் பஹதூர் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்தார். கல்வி அதிகாரிக்கு அளித்த வரவேற்புப் பத்திரத்தில் பல குறைகளையும் ஆசிரியர்கள் எடுத்து உரைத்தனர். முக்கியமாக, அடிக்கடி காரணமில்லாமல் மாற்றுதலும் அப்படி மாற்றுதல் செய்தால் அதற்கு உண்டான பிரயாண உபகாரச் சம்பளம் கொடுக்காததைப் பற்றியும் அநேக கணக்குப் பட்டிகள் (Bills) இன்னும் கொடுக்கப்படாமலிருப்பதைப் பற்றியும் முக்கியமாக அவர்கள் சம்பளம் சென்ற ஐந்து மாத காலமாகப் பாக்கியிருப்பதைப் பற்றியும் கூறி, இந்தக் குறைகளை நீக்கும்படி பிரார்த்தித்தனர். தலைவர் அவர்களிடம் அனுதாபம் காட்டி தன்னால் இயன்ற வரையில் உதவி செய்வதாகச் சொல்லி, ஆசிரியர்கள் சங்கம் ஏற்படுத்துவது நலமென்றும், தங்கள் குறைகளைச் சங்கத்தின் மூலம் அதிகாரிகளுக்குத் தெரிவித்தால் சீக்கிரத்தில் குறைகள் நிவர்த்திக்கப்படலாமென்றும் கூறினார். பிறகு விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடந்தது. வேலூர் மஹந்த உயர்தரக் கலாசாலை Mr. எஸ். ஸ்ரீனிவாச அய்யர் அக்கிராசனம் வஹித்தார். மாலை

2-மணிக்கு மகாநாடு கூடும்பொழுது Mr. D. நத்தேனியல், ஜில்லா போர்டு மெம்பர் தலைமை வஹித்தார். தலைவர் பிரசங்கத்தில் ஆசிரியர்களுக்குச் சில புத்திமதிகள் கூறி அவர்களுடைய குறைகளை நிவர்த்திக்கச் சங்க முறையே சரியான முறை என்றும் சொன்னார். பிறகு மகாநாட்டில் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன. முக்கியமாக,

(1) 1934ஷ சம்பளவிகுதிப்பிரகாரம் ஆசிரியர்களின் ஆரம்பச் சம்பளத்தை நிர்ணயிக்கும் பொழுது, கவர்ன்மெண்டார் உத்திரவின் படி ஆசிரியர்களின் சர்விஸ் கணக்கில் எடுக்கப்பட வில்லையென்றும், ஆசிரியர்களின் ஆரம்பச் சம்பளத்தைத் திருத்தி, அதனால், அவர்களுக்குச் சேர வேண்டிய அதிக சம்பளத்தை 1—4—35ல் கணக்கிட்டுக் கொடுக்கும்படி அதிகாரிகளை இந்த மகாநாடு பிரார்த்திக்கிறது. (2) பர்ஸனல் சம்பளம் கொடுப்படுதென்று ஜில்லா போர்டு தீர்மானித்த போதிலும், அச்சம்பளம் இதுவரையில் கொடுக்கப்படாததினால் ஷை சம்பளத்தை 1—4—35ல் ஆசியர்களுக்குக் கொடுக்க உத்தரவு அளிக்கக்கேட்டுக் கொள்கிறது. (3) ஆசிரியர்களின் சம்பளம் மாதந்தோறும் கொடுக்காததினால் ஆசிரியர்கள் மிக கஷ்டத்துக்குள்ளாகிறார்களென்றும், அதிகாரிகளை ஆசிரியர்களின் சம்பளம் மாதந்தோறும் குறித்த தேதியில் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது. (4) வேலூர் ஜில்லா போர்டு ஆரம்பாசிரியர்கள் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும், அச்சங்கத்தை வடாற்காடு ஜில்லா உபாத்தியாயர்களின் சங்கத்துடன் சேர்க்கப்பட வேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

ஈரோடு

ஈரோடு ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் Mr. R. H. A. பாப்லி 'இங்கிலாந்தில் ஆரம்பக் கல்வியின் தற்காலப் போக்கு' என்னும் விஷயத்தைப்பற்றி 18—4—36ல் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். ஸ்ரீமான் V. கிருஷ்ண அய்யங்கார், டெபுடி இன்ஸ்பெக்டர், ஈரோடு, ரேஞ்சு, தலைமை வஹித்தார்.

அபிராமம்

அபிராமம் ஆரம்பாசிரியர்ச் சங்கத்தின் 24வ் வருஷாந்தரக் கூட்டம் 19—4—36ல் நடைபெற்றது. மஹம்மதியர் உயர்தரக் கலாசாலைத் தலைமை ஆசிரியர் ஜனாப் G. யாகூப்கான் சாஹிப் பஹதூர் B.A.L.T. தலைமை வஹித்தார். ஸ்ரீமான் T. R. காமாக்ஷி அய்யர் 'ஆசிரியர்களும் ஆரம்பக் கல்வியும்,' என்று ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு இவ்வருஷத்திற்கு வேண்டிய காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் காரியதரிசிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கோவை,

கோவை வீராசாமி முதலியார் ஹையர் எலிமெண்டரி பாடசாலையின் நாள், நேற்று மாலை டெபுடி இன்ஸ்பெக்டர் Mr. பி. ஆர். கிருஷ்ணய்யர்

தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி Mr. கே. ஆர். சுப்பராயர் சார்பாக, பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர் Mr. ஜே. பசுபதி ஐயர் சென்ற வருஷ அறிக்கையை வாசித்துக் காட்டி, சென்ற ஆண்டில் நடைபெற்ற வேலைகளை விளக்கிக் கூறினர். பள்ளிக்கூட மாணவர்கள் ''ராக்ஷஸி மகத்துவ காங்க்ஷா'' என்ற நாடகத்தைச் சிறப்பாக நடித்துக் காட்டினார்கள்.

தலைவர், மாணவர் மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கினர்.

ஆங்கில சம்பாஷணை ஒன்றும் நடைபெற்றது.

Mr. கே. ஆர். சுப்பராயர் வந்தனமளிக்கையில் புதுக் கட்டிடம் கட்டத் தீர்மானித்திருப்பதாகவும், சர்க்கார் கொடுக்க இசைந்திருக்கும் பாதி கிராண்டுத் தொகையைச் சீக்கிரமே கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளுவதாகவும் கூறினர்.

மதுராந்தகம்

மதுராந்தகம் ஹிந்துப் பெண்கள் பாடசாலை வருஷாந்திர விழாவும், பரிசளிப்பும் ஞாயிற்றுக்கிழமை தினம் அதி விமரிசையாகக் கொண்டாடப் பட்டன. அவற்றிற்குத் தலைமை வகித்த ஹிந்து உயர்தரப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் Mr. கே. சுப்ரமண்ய அய்யர் அவர்கள், ''பெண் கல்வி'' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவாற்றினர். பாடசாலை மாணவிகள் 'லவ—குசா' என்னும் நாடகத்தை நடித்துக் காண்பித்தனர்.

நேற்றைய தினம், மேற்படி பெண் பாடசாலை நிதிக்கு உதவியாக 'குசேலா' எனும் மற்ெருரு நாடகம் அதி விமரிசையாக நடிக்கப்பட்டது. அதற்கு அநேக பிரமுகர்கள் வந்திருந்தனர்.

கோவிந்தப்ப நாயகர் பாடசாலை

இப்பாடசாலை, கல்வித்துறையில் முற்போக்கான கொள்கைகளை உடையது. மாணவர்கள் கல்விகற்கும் முறைகளில் தற்கால அறிவு ஆராய்ச்சிக்கு ஏற்ற முறைகளே அனுசரிக்கப்படுகின்றன. சென்ற இரண்டு ஆண்டுகளாகத் திருவாளர்-சஹூர் முறையை இப்பாடசாலையில் மாணவர்கள் உபயோகப்படுத்துகின்றனர். மாணவர்கள் தாங்களே கல்வி கற்றுப் பாடங்களை முடிக்கின்றனர். இவ்வாண்டு இப்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் சென்னைக்கு அருகே உள்ள புழலேரியில் குருகுல முறையை நடத்துவதற்காகச் சென்று மூன்று நாள் தங்கி, அம் முறையை மேலானவகையில் நடத்தினர்கள். பள்ளிக்கூடமாணவர்கள் அனைவரும் ஒரு குடும்பத்தில் வாழும் பிள்ளைகள் போல மகிழ்ந்து வாழ்ந்தார்கள். பத்துப்பத்து மாணவர்களுக்கு ஒவ்வொரு தலைவர், மாணவர்களிலேயே தேர்ந்தெடுத்து அமைக்கப்பட்டிருந்தார்கள். அப்படி நின்ற தலைமை மாணவர்களையும் மற்ற மாணவர்களையும் கண்காணிக்க ஆசிரியர்களும் தக்க முறையில் பகுக்கப் பட்டிருந்தார்கள்.

மாணவர்கள் பகுதிப் பகுதியாகப் பிரிக்கப் பட்டிருந்த முறையிலேயே, ஒவ்வொரு மரத்தின் கீழும் இருந்து படித்துக் கொண்டிருந்தனர். ஆசிரியர்கள் மரத்தின் கீழ் மாணவர்க்குப் போதனை செய்த நிலை காண்பவர்

உள்ளத்தைக் கவர்ந்து நின்றது. பெற்றோர்களும் அதனைக் கண்டு மிகவும் மகிழ்ந்து பாராட்டினார்கள்.

உணவு விடுதியில் மாணவர் எல்லோரும் ஒரே நிலையில் இருந்து உணவு அருந்தினர். ஜாதி மத பேதம் என்பது தலை காட்டாதிருந்தது. "எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம்," என்பது அங்கேயே மிளிர்ந்து நின்றது. ஆசிரியர்களும் மாணவர்களோடு ஒன்று சேர்ந்து பெற்றோர்களாகவே காணப்பட்டார்கள்.

மாணவர்கள் தங்களுடைய வாழ்க்கையை எப்படி நடத்த வேண்டும் என்பதை நேர்முகமாகப் பல வழிகளிலும் அறிந்தார்கள். மூன்று நாளும் நடைபெறப் போகும் நிகழ்ச்சி முறை முதலிலேயே அறிவிக்கப் பட்டிருந்தது. அம் முறையிலேயே யாவும் நடை பெற்றன.

காலை மாலை இரு வேளையும், மாணவர் அனைவரும் ஒன்று சேர்ந்து கடவுள் வழிபாடு செய்தனர்.

அது மாணவர்க்கு, புது உணர்ச்சியையும் நல்ல பழக்கத்தையும் உண்டு பண்ணியது. கடவுள் வழிபாட்டின் மேன்மையையும், இந்து மக்கள் சமயப் பற்று இன்றி வாழும் நிலையையும், பல உதாரணங்களோடு எடுத்துக் காட்டி தலைமை ஆசிரியர் மணி, கோடீஸ்வர முதலியாரவர்கள் பி. ஏ. எல். டி., சமயபோதனை செய்தது, ஒவ்வொரு மாணவர் உள்ளத்திலும் சமய உணர்ச்சியை வேரூன்றும்படி செய்தது. மற்ற சமயங்கள் மேல் வெறுப்பில்லாமையும், நம் சமயத்தில் ஆழ்ந்த பற்றும் இருத்தல் வேண்டும் என்று தாம் எடுத்துக் கூறி நல்லுணர்ச்சியை உண்டு பண்ணியதோடு சமயபோதனை செய்வதில் திறம் பெற்ற திருவாளர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்கள் முதலான பேராசிரியர்களைக் கொண்டும் நற்போதனை செய்வித்தார்கள்.

சாரண இயக்கத்தினரும் திறம் பெற்ற பல ஆடல்களை ஒவ்வொரு நாள் இரவிலும் செய்து காட்டி மகிழ்ச்சியூட்டினார்கள். தம் இயக்கத்திற் கேற்ப பல பேருதவிகளையும் இடை இடையே செய்து தம் கடமைகளைப் பூர்த்தி செய்தார்கள்.

பழய மாணவர் பலரும் போட்டிப் பந்தயம் முதலிய நிகழ்ச்சிகளிலும், குருகுலக் கல்வி முறைத்திட்டங்களிலும் இணைந்திருந்து மாணவர் பகுதியை அழகு செய்தார்கள்.

தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவும், தெலுங்குச் சங்க ஆண்டுவிழாவும் அவ்விடத்திலேயே மிகச் சிறப்பாக நடந்தேறின. அப்பொழுது பத்திரிகை நிருபர்களும் விஜயம் செய்திருந்தனர்.

பள்ளிக் கூட நிகழ்ச்சிகளைத் தனியிடத்தில் வைத்து நடத்தும் முறையையும், மாணவர்கள் கொள்ளும் உள்ளக்கிளர்ச்சியையும் பெற்றோர் பலர் வந்து கண்டு மகிழ்ந்தனர்.

இவைகளை நேரில் கண்டவர் யாவரும், மாணவர்களை எல்லாத்துறைகளிலும் செம்மைப் படுத்தி, ஒழுங்கான முறையில் மேன்மைக்குக் கொண்டு வர, கோவிந்தப்ப நாய்க்கர் பாடசாலை சிறந்த முயற்சி எடுத்துக் கொள்ளுகிறதுஎன்பதை எடுத்துப் பாராட்டிப் பேசினார்கள்.

# கல்வி வரித்திட்ட விவரம்

சட்ட சபையில் ஜனவரி 27-ந் தேதியில் கொடுத்த பதில்

| ஜில்லா போர்டு | | வரித் திட்டம்-நிலவரியில் பெர்ஸென்ட் |
|---|---|---|
| அநந்தபூர் | — | $19\frac{4}{9}$ |
| வட ஆற்காடு | — | ,, |
| தென் ஆற்காடு | — | $16\frac{2}{3}$ |
| பெல்லாரி | — | $8\frac{1}{3}$ |
| செங்கல்பட்டு | — | $18\frac{1}{15}$ |
| சித்தூர் | — | $11\frac{1}{9}$ |
| கோயமுத்தூர் | — | $19\frac{4}{9}$ |
| கடப்பை | — | $15\frac{5}{18}$ |
| கஞ்சம் | — | ,, |
| கீழ்க் கோதாவரி | — | $16\frac{2}{3}$ |
| மேற் கோதாவரி | — | ,, |
| குண்டூர் | — | ,, |
| ஓங்கோல் | — | ,, |
| தென் கன்னடம் | — | $20\frac{5}{6}$ |
| கிருஷ்ணை | — | $16\frac{2}{3}$ |
| கர்நூல் | — | ,, |
| மதுரை | — | $18\frac{1}{18}$ |
| ராமநாதபுரம் | — | $16\frac{2}{3}$ |
| சேலம் | — | ,, |
| கீழ்த் தஞ்சாவூர் | — | $8\frac{1}{3}$ |
| மேல் தஞ்சாவூர் | — | ,, |
| திருநெல்வேலி | — | $9\frac{13}{18}$ |
| திருச்சிராப்பள்ளி | — | $19\frac{4}{9}$ |
| விசாகப்பட்டணம் | — | $13\frac{8}{9}$ |
| பொபிலி | — | $8\frac{1}{3}$ |
| நீலகிரி<br>மலையாளம் } | — | 25-ம் தொழில் வரியில் 25-ம் |
| நெல்லூர் | — | $16\frac{2}{3}$ |

# பத்திராதிபர் குறிப்பு

**வீண் செலவேன்!**

ஆரம்பக் கல்வி சம்பந்தமாய்ச் செலவிடப்படும் பணம் பெரும்பாலும் பயனளிப்பதில்லையெனப் பலர் கூறுகின்றனர். வீண்செலவு, வியர்த்தம், “வேஸ்டேஜ்” என்னும் வார்த்தைகளை அடிக்கடி உபயோகித்து வருவதை நாம் காண்கிறோம். அதிகாரிகள் வெளியிட்டு வரும் ரிபோர்டுகளிலும் வேஸ்டேஜைப்பற்றிப் புள்ளிவிவரம் காட்டியிருக்கிறார்கள். வீண்செலவைத் தடுப்பது நமது முக்கிய கடமையாகும். வேஸ்டேஜ் எவ்வாறு ஏற்படுகிற தென்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அநேகம் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படித்தாலும், நான்காவது வகுப்பைத் தாண்டிய பிள்ளைகள் சிலரே. நான்காவது வகுப்பையடையாது நடுவில் பள்ளிக்கூடம் விட்டுவிடும் குழந்தைகள் கற்றதைச் சீக்கிரம் மறக்கிறார்கள். அவர்களைப் படியாதவர்களென்றே கருத வேண்டும்.

வேஸ்டேஜ் இரண்டு காரணங்களால் ஏற்படும். (1) குழந்தைகள் சீக்கிரத்தில் பள்ளிக்கூடத்தை விட்டு விடுதல். (2) கீழ் வகுப்பிலேயே சில வருஷங்கள் தங்கி நான்காவது வகுப்பைச் சேராதிருத்தல்; புள்ளி விவரங்களைக் கவனிக்கும் போது, குழந்தைகள் பெரும்பாலும் இரண்டே வருஷங்கள் பள்ளிக்கூடம் போகிறதாகத் தெறிகிறது. கட்டாயப் படிப்புச் சட்டம் அமுலிலிருக்கும் இடங்களிலும் குழைந்தைகள் பள்ளிக்கூடங்களில் அதிக வருடந்தங்குவதாகக் காணோம். இதிலிருந்து அநேக குழந்தைகள் இரண்டாவது வகுப்பை யடைந்ததும் படிப்பை நிறுத்தி விடுகிறார்களெனக் கொள்ளலாம். ஆகவே, இவர்கள் பொருட்டு ஏற்பட்ட செலவுவியர்த்த மல்லவா? கீழ் வகுப்புக்களிலேயே பல பிள்ளைகள் தங்கி விடுகிறார்களென்றும் புள்ளிவிவரங்களால் ரூபிக்கலாம். நூறு பிள்ளைகள் ஒரு வருஷத்தில் சேர்வதாகக் கொள்வோமானால் அடுத்த வருஷத்தில் அவர்களெல்லோரும் மேல் வகுப்பைச் சேர்வதில்லை. சாதாரணமாய் கீழ் வகுப்புக்களில் பல பிள்ளைகளும் மேல் வகுப்புக்களில் சில பிள்ளைகளும் படிக்கிறார்கள். உயர்தரப் பாடசாலைகளில் பல வகுப்புக்களிலுள்ள குழந்தைகளின் தொகை ஏறக்குறைய ஒத்திருக்க, ஆரம்பப் பாடசாலைகளில் வித்தியாசமிருப்பது ஆச்சரியமல்லவா? கீழே காட்டியிருக்கும் வகுப்பு விகிதப் புள்ளி விவரத்தைக் கவனிப்போம்.

(பையன்கள்) பள்ளிக்கூடங்களில் ஐந்து வகுப்புக்களிலுமுள்ள பிள்ளைகள்

| காலம். | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 1927-28—1931-32 | 100; | 39·15; | 28·47; | 21·49; | 7·51. |
| 1928-29—1932-33 | 100; | 38·90; | 28·10; | 21·67; | 7·57. |
| 1929-30—1933-34 | 100; | 38·92; | 28·15; | 22·16; | 8·04. |

முதல் வகுப்பைச் சேர்ந்த நூறு பிள்ளைகளுள் சுமார் ஏழு அல்லது எட்டுப் பிள்ளைகளே நான்காவது வகுப்பை முடிக்கிறார்களென நாம் எளிதில் அறியலாம். சுமார் 67 பிள்ளைகள் கீழ் வகுப்புக்களில் இருப்பதிலிருந்து பல குழந்தைகள் கீழ் வகுப்புக்களிலேயே தங்கி விடுகிறார்களெனக் கொள்ளலாம். இதை ஸ்டாக்நேஷன் (Stagnation) என்று சொல்வார்கள். இப்படித் தங்கி விடுவதால் இப் பிள்ளைகளுக்காகச் செய்த செலவு வீணே என்று சொல்ல வேண்டும்.

நம் மாகாணத்தில் ஆயிரக்கணக்காய்ப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தைச் சீக்கிரம் விடுவதாலும் முறையே மேல் வகுப்புச் செல்லாது தங்குவதாலும் வேஸ்டேஜ் ஏற்படுகிறது. ஒவ்வொரு பிள்ளைக்காக ரூ. எட்டு செலவழிப்பதாகக் கொண்டால், மிகுந்த பணம் வீணாகச் செலவிடப் பட்டதாக ஏற்படுகிறதல்லவா? ஏழைகள் கூடிய நம் மாகாணத்தில் செலவழிக்கும் பணத்திற்குப் பயன் ஏற்பட வேண்டியது அவசியமல்லவா?

எவ்விதத்தில் உபாத்தியாயர்களாகிய நாம் வேஸ்டேஜைத் தடுக்கலாமென்பதைக் கவனிக்க வேண்டும். பள்ளிக்கூடங்களில் குழந்தைகளை நான்கு வருஷமாவது இருக்கும்படி செய்ய வழியுண்டாவென்று நாம் யோசிக்க வேண்டும். கட்டாயப் படிப்புச் சட்டத்தால் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திலிருக்கச் செய்யலாம். அது அதிகாரிகளின் பொறுப்பு. கட்டாயப் படிப்புச் சட்டம் மாகாணமெங்கும் அமுலுக்குச் சமீபத்தில் வரக்கூடுமென்று நினைப்பதற்கில்லை. கட்டாயச் சட்டமில்லா விட்டாலும், உபாத்தியாயர் தம் நயத்தாலும், ஊக்கத்தாலும், குணத்தாலும் பெற்றோர்களின் சுபாவத்தை மாற்றமுடியும். குழந்தைகள் பயமின்றி உற்சாகத்துடன் பள்ளிக்கூடஞ் செல்லும்படி அவர் நடந்து கொள்ள வேண்டும். முறையே அடுத்தடுத்து மேல் வகுப்பினைச் சேரும்படி பிள்ளைகளைச் செய்வது உபாத்தியாயரின் கடமையே. பிலிபைன் தீவுகள், போர்டோ ரீகோ முதலிய இடங்களிலும் ஆரம்பக் கல்வி அளவில் "வேஸ்டேஜ்" இருப்பதாகக் கண்டு அதைத் தடுக்க வழி தேடுகிறார்கள். பல பிள்ளைகள் கீழ் வகுப்புக்களில் தங்குவதின் காரணத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்து வருகிறார்கள். குழந்தைகளைப் பரீக்ஷிக்கும் முறையைச் சீர்திருத்த வேண்டுமென்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள். பாடதிட்டத்தையும் குழந்தைகளின் சுபாவத்திற் கேற்பமாற்ற வேண்டுமென்றும் ஏற்படுகிறது. நம் மாகாணத்திலும் இத்தகைய உபாயங்களை அனுஷ்டிப்பதுடன், உபாத்தியாயர்களும் தம்மாலியன்ற வரையில் குழந்தைகளின் சுபாவத்தை யறிந்து சரியான வழியில் போதித்து வந்தால் வேஸ்டேஜைத் தடுக்கலாம். தற்குறியாட்கள் நிறைந்த மாகாணமென்ற வார்த்தையும் ஒழியும். தேசத்திற்கு ஆசிரியர்கள் பெரிய தொண்டு செய்தவர்களாகப் பிறர் தடையின்றி ஒப்புக்கொள்ளவும் கூடும்.

## 27-வது மாகாணக் கல்வி மகாநாடு

27-வது சென்னை மகாணக் கல்வி மகாநாடு வரும் மேமீ 7, 8, 9 தேதிகளில் சேலத்தில், முனிஸிபல் காலேஜ் ஹாலில் நடைபெறும். திவான்

பகதூர் S. E. ரங்கநாதம் அவர்கள், (அண்ணாமலை ஸர்வ கலாசாலை மாஜி உப அத்தியக்ஷகர்) தலைமை வஹிப்பார். அப்பொழுது ஒரு கல்விப் பொருட் காட்சியும் நடைபெறும். அச்சமயம் ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி ஆசிரியர்களின் நிலைமை முதலிய விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழும். இம் மகாநாட்டுக்கு அநேக ஆசிரியர்கள் விஜயம் செய்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரவேற்புக் கமிட்டியார்கள் மகா நாட்டுக்கு வரும் பிரதி நிதிகளின் சௌகரியங்களுக்கு ஏற்ற ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். சேலத்துக்கு அருகாமையிலுள்ள மேட்டூர், ஏற்காடு முதலிய இடங்களுக்கு உலாசாரி போவதற்கும் சௌகரியங்கள் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. தவிரவும் அச்சமயம் வியாயம வித்தை (Physical Education) மகா நாடும், பூகோளவித்தை மகா நாடும் (Geographical Conference) கூடும். இம் மாகாண ஆசிரியர்களுக்கு ஒன்று கூடி, சங்கத்தை விர்த்தி செய்யவும், தங்கள் தொழில் முறையில் அபிவிர்த்தியடையவும் இது ஒரு உற்ற தருணம்.

M. S. M. ரெயில்வே அதிகாரிகள் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பல இடங்கள் செல்வதற் கென்றே மேமீ 1௳ முதல் ஜூன் 15௳ வரை, ('Go as you please') இஷ்டம்போல் போகும் டிக்கட்டுகள் கொடுப்பதாக விளம்பரம் செய்திருக்கிறார்கள். இதைப் போலவே தென் இந்திய ரயில் அதிகாரிகளும் (Circular Ticket) அல்லது சுற்றுப் பிரயாண டிக்கட்டுகள் குறைந்த சார்ஜில் கொடுக்கிறார்கள். இதுகள் விவரம் எந்த ரயில் ஸ்டேஷனிலும் விசாரித்தால் கிடைக்கும். அநேக ஆசிரியர்கள் சேலத்துக்கு விஜயம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மகா நாட்டைப் பற்றி மற்ற விவரங்களுக்கு வரவேற்புக் கமிட்டி காரியதரிசிக்கு (Municipal High School, Salem) எழுதித் தெரிந்து கொள்ளலாம்.